பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆடி 05 புதன்கிழமை 21.07.2021 கதிர் 124

## கப்பம் கோரல் குழுவின் 4 உறுப்பினர்கள் கைது!

டுபாயிலிருந்து இயங்கும் கப்பம் கோரல் குழுவொன்றின் உறுப்பினர்கள் 4 பேர் பொலிஸாரால் கைதுசெய் யப்பட்டுள்ளனர்.

இந்தக் கப்பம் கோரும் குழுவின் பிரதானி டுபாய் நாட்டுக்குத் தப்பிச் சென்ற ஒருவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர் 6 மனித கொலைக்குற்றச் ☞2

## ரிஷாத்தின் வீட்டில் பணியாற்றிய 11 மலையக யுவதிகள் துன்புறுத்தல்

### 'திவயின' பத்திரிகையில் இப்படிச் செய்தி

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரிஷாத் பதியுதீன் எம்.பியின் வீட்டுக்கு, மலையகத்திலிருந்து இதற்கு முன்னர் அழைத்து வரப்பட்டிருந்த 11 யுவதிகள் பல்வேறு துன்புறுத்தல்களை எதிர்நோக்கியுள்ளனர் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த 11 பேரில் இருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது எனப் பொலிஸ் தரப்பு செய்திகளை மேற்கோள் காட்டி 'திவயின' என்ற சிங்களப் ☞2

## ஹிஷாலினி எமது இரத்தம்!

## கூப்பாடு போடும் 'மொட்டு' அணியினர் அறியவேண்டும் என்று மனோ பதிலடி

மனோ கணேசன், திகாம்பரம், இராதாகிருஷ்ணன், வேலு குமார், உதய குமார் ஆகிய எம்.பிக்கள், சிறுமிஹிஷாலினிதொடர்பில் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறார்கள் எனக் கூசாமல் பொய் பேசும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. டிலான் பெரேரா, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ஸ கட்சி எம்.பி. முஹமட் முஸம்பில் ஆகிய அரச கட்சி அரசியல்வாதிகள், தங்கள் அரசு தோட்டத் தொழிலாளருக்கு இழைத்துள்ள அநீதியைக்கணக்கில் எடுக்கத் தவறுவதேன்?

- இவ்வாறு ☞2



# வடக்கின் புதிய பிரதம செயலரை உடன் மாற்றவேண்டும் ஜனாதிபதி

### மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்கள் கடிதம்

(ந.லோகதயாளன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண பிரதம செயலாளர் நியமனத்தில் உடனடியாக மாற்றம் செய்யுமாறு வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர், முன்னாள் முதலமைச்சர் மற்றும் முன்னாள் உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பத் தீர்மானித்துள்ளனர். ☞2



## ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி யாழில் ஆர்ப்பாட்டம்

### மகளிர் அமைப்பினர், அரசியல்வாதிகள் பங்கேற்பு

(இ.கலையமுதன்)

டயகமவைச் சேர்ந்த சிறுமி ஹிஷாலினியின் மரணத்துக்கு நீதி கோரி யாழ்ப்பணத்தில் மாபெரும் கவனவீர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

யாழ். மத்திய பஸ் நிலையம் முன்பாக காலை 9.30 மணியளவில் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மேற்படி போராட்டம் பேரணியாகப் ☞2





## விபத்துகளில் ஒரே நாளில் 8 பேர் சாவு!

நாட்டில் நேற்று வெவ்வேறு இடங்களில் இடம்பெற்ற விபத்துக்களில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

இவ்வாறு உயிரிழந்தவர்களில் மூவர் பாதசாரிகள் என்றும், மூவர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்கள் என்றும் அவர் கூறினார்.

மேலும், இருவர் ஓட்டோக்களில் பயணித்தவர்கள் என்றும் அவர் குறிப்பிட்டார். ☞2

## கொரோனாச் சட்டத்தை மீறிய மேலும் 121 பேர் சிக்கினார்கள்

தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 121 பேர் கடந்த 24 மணிநேரத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்தார்.

அதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை 51 ஆயிரத்து 859 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, பயணத் தடைகளை மீறி மாகாண எல்லையைத் தாண்டி, 235 வாகனங்களில் நேற்றுப் பயணித்த 584 பேர் திருப்பி அனுப்பப்பட்டனர் என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.

## ரிஷாத்தின் மனைவி உட்பட நால்வரும் பொலிஸாரிடம்

### 48 மணி நேரம் தடுத்துவைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி

கொழும்பு, ஜூலை 24

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மனைவி உட்பட நால்வரை 48 மணிநேரம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கு நீதிமன்றம் இன்று அனுமதி வழங்கியது.

ரிஷாத் பதியுதீனின் மனைவி, அவரின் தந்தை மற்றும் சகோதரன் ஆகியோரையும், ரிஷாத்தின் வீட்டில் உயிரிழந்த ஹிஷாலினியை பணிப்பெண்ணாக அமர்த்திய தரகரும் கொழும்பு புதுக்கடை நீதிவான் நீதிமன்றத் தில் இன்று முன்னிலைப்படுத்தப்பட்டனர். இதன் போது பொலிஸாரால் விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்று நீதிமன்றம் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தது.

சந்தேகநபர்களை எதிர்வரும் 26ஆம் திகதி மீண்டும் நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

## கூப்பாடு போடும் 'மொட்டு' அணியினர் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கேள்வி எழுப்பியுள்ளார் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி.

இந்த விவகாரம் பற்றி மனோ எம்.பி. மேலும் கூறியதாவது:-

சிறுமி ஹிஷாலினி தொடர்பாக நாம் எம் கடமையைச் சிறப்பாகச் செய்துள்ளோம். தமிழ் முற்போக்குக் கூட்டணியாக நாம்,

(1) பொரளை நிலைய பொலிஸ் விசாரணை ஆய்வு

(2) பொலிஸ் தலைமையக விசாரணை மற்றும் விசேட பொலிஸ் குழுக்கள் ஆய்வு

(3) நாடாளுமன்றத்தில் உரை மற்றும் நேரடியாக பொலிஸ் துறை அமைச்சர் சரத் வீரசேகரவிடம் கேள்வி

(4) மலையகத்தில் நேரடி ஆர்ப்பாட்டங்கள்

(5) சிங்கள மொழி ஊடக மாநாடுகள்

(6) சிங்கள தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சிகள்

ஆகியவற்றைச் செய்த பின்னர்தான், 'சிறுமி ஹிஷாலினி' விவகாரம் தேசிய அரங்கில் சூடுபிடித்தது என்பதை கூப்பாடு போடும் அரச அரசியல்வாதிகள் உணர வேண்டும்.

இது எமது கடமை. அதை தமிழ் முற்போக்குக் கூட்டணி எவருக்காகவும் கைவிடாது. ஹிஷாலினி எமது இரத்தம். எமது மக்களுக்காக நாம் வாய் திறந்து பேசாவிட்டால், யார் பேசுவது? நாம் போராடாவிட்டால், யார் போராடுவது? என்பதை நாடு முழுக்க வாழும் தமிழ் மக்கள், நல்லுள்ளம் கொண்ட முஸ்லிம், சிங்கள மக்கள் உணர்ந்து கொண்டுள்ளார்கள்.

இன்று தோட்டத்தொழிலாளர் வறுமையில் வாடுகின்றனர். அவர்களது வருமானம் எமது நல்லாட்சியின் 2019 ஆம் ஆண்டை விட, இன்று வெகுவாகக் குறைந்து விட்டது. இதற்குக் காரணம், ஒருபுறம், ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பளம் வாங்கித் தருகின்றேன் என்று கூறிவிட்டு இந்த அரசு, வேலை நாள் எண்ணிக்கை மற்றும் கொழுந்து நிறை ஆகியவற்றைத் தீர்மானிக்கும் ஏகபோக உரிமையை நிறுவனங்களுக்கு வழங்கி விட்டு, சும்மா இருக்கின்றது. மறுபுறம், விலைவாசியோ பலமடங்கு உயர்ந்து விட்டது.

சிறுமி ஹிஷாலினி உட்பட தோட்டத் தொழிலாளர்களின், பிள்ளைகள் நகரப் பகுதிகளுக்குத் தொழில் தேடி வந்து ஆபத்தில் விழுவதற்கு பெருந்தோட்டத் துறையில் இன்று நிலவும் அதிமோச வறுமைதான் காரணம். இந்த அதிமோச வறுமைக்கு காரணம் என்ன? இந்த அரசின் தோட்டத்தொழிலாளர் தொடர்பான அக்கறையின்மை, அரசில் இருக்கின்ற இ.தொ.காவின் மௌனம் ஆகியவையே பிரதான காரணங்கள் என்பதை, இன்று சிறுமி ஹிஷாலினி பற்றி பொய்யாகக் கூப்பாடு போடும் எம்.பி. டிலான் பெரேரா, அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, எம்.பி. முஹமட் முஸம்பில் போன்றவர்கள் உணர வேண்டும்.

இந்தப் பிரச்சினை தமிழ், முஸ்லிம், சிங்கள இனப்பிரச்சினை அல்ல. இது ஒரு சட்டம், ஒழுங்குப் பிரச்சினை என்று கூட்டணி தலைவர் என்ற முறையில் நான் இலங்கை நாடாளுமன்றத்தில், மிக நிதானமாகவும், மிகப் பொறுப்புடனும் தெளிவாகப் பலமுறை எடுத்துக் கூறிவிட்டேன்.

ஹிஷாலினி வீட்டுக்குச் சென்று மௌன அஞ்சலி செலுத்தியதைத் தவிர, அரசுக்கு உள்ளே இருக்கும் இ.தொ.கா., இந்தப் பிரச்சினை பற்றி கூறும்படியாக இதுவரை ஒன்றும் செய்யவில்லை. எதுவாயினும், இப்போது விசாரணை நடக்கின்றது. அதற்கு அனைவரும் கண்காணிப்புடன் கூடிய பூரண ஒத்துழைப்பை வழங்குவோம்.

இந்நிலையில், எம்மைப் பற்றி கூசாமல் பொய் பேசி குறை கூறும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி. டிலான் பெரேரா, ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, விமல் வீரவன்ஸ கட்சி எம்.பி. முஹமட் முஸம்பில் ஆகிய அரச அரசியல்வாதிகள், தங்கள் அரசு தோட்டத் தொழிலாளருக்கு இழைத்துள்ள அநீதியைக் கணக்கில் எடுக்கத் தவறுவதேன்?

நாம் எமது ஆட்சியில் துண்டு விழும் மேலதிக 50 ரூபாவைத் தரத் தவறிவிட்டோம் எனக் குற்றஞ்சாட்டிய இவர்கள் தோட்டத்தொழிலாளருக்கு இவர்களின் ஆட்சியில் இன்று என்ன செய்துள்ளார்கள்?

ஒரு நாளைக்கு ஆயிரம் ரூபா சம்பளம் தருகின்றோம் என்று கூறிவிட்டு, வேலை நாள் எண்ணிக்கை மற்றும் கொழுந்து நிறை ஆகியவற்றை தீர்மானிக்கும் ஏகபோக உரிமையை நிறுவனங்களுக்கு வழங்கி விட்டு, இந்த அரசு சும்மா இருக்கின்றது. மறுபுறம், விலைவாசியோ பலமடங்கு உயர்ந்து விட்டது. ஆகவே, பத்து நாள் வேலையும், குறைந்த வருமானமும் தோட்டத் தொழிலாளரை வாட்டுகின்றது. வறுமை பெருந்தோட்டத் துறையில் தாண்டவமாடுகின்றது.

இதுவே இன்று சிறுமி ஹிஷாலினி உட் பட கணிசமான பெருந்தோட்டத் துறை பிள்ளைகள், பெண்கள், ஆண்கள் நகரப் பகுதிகளுக்கு தொழில் தேடி வர பிரதான காரணம்.

வறுமை எல்லோருக்கும் பொதுவானதுதான். அதனால்தான், இலங்கையின் சிங்கள, தமிழ், முஸ்லிம் பெண்கள் தொழில் தேடி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்று சொல்லொணாத் துன்பங்களுக்கு முகம் கொடுக்கிறார்கள். இப்படிதான், மூதூரைச் சேர்ந்த ஏழை முஸ்லிம் சிறுமி ரிசானா நபீக், சவுதி அரேபியா சென்று அங்கே கொல்லப்பட்டார்.

ஆனால், பெருந்தோட்டத்துறையில், இன்று ஏற்பட்டுள்ள நிலைமை, 1970 களில் அன்றைய ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க ஆட்சிக்கால நிலைமையை நெருங்கிக் கொண்டு இருக்கின்றது என்பதை இந்த அறிவு கெட்ட அமைச்சர்கள் அறிந்துகொள்ளவேண்டும். எதிரணியில் இருக்கும் எம்மை பொய்யாகக் குறை கூறுவதை விட்டு, இவர்கள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்சினையில் ஆவன செய்ய வேண்டும் - என்றார்.

## ரிஷாத்தின் வீட்டில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பணிப்பெண்ணாக பணி புரிந்த யுவதி ஒருவர் பம்பலப்பிட்டி பகுதியில் உயிரை மாய்த்துக் கொண்ட சம்பவமொன்று தொடர்பிலும் பொலிஸார் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

அதேவேளை, ரிஷாத் பதியுதீன் அமைச்சராகப் பதவி வகித்த காலப் பகுதியில், அவரது உத்தியோகபூர்வ வீட்டில் மலையக யுவதி ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான சம்பவம் தொடர்பில், ரிஷாத் பதியுதீனின் மனைவியின் சகோதரன் நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்ட யுவதி, தான் துஷ்பிரயோகத்துக்கு உள்ளான வீட்டின் அறை மற்றும் ஏனைய பகுதிகளைப் பொலிஸாருக்குக் காண்பித்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

பிரதான இன்ஸ்பெக்டர் வருணி போகஹவத்த தலைமையி லான குழுவொன்று, இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளுக்காக மலையகம் சென்றுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ரிஷாத் பதியூதீனின் வீட்டில் பணி புரிந்த 16 வயதான ஹிஷாலினி, தீக்காயங்களுடன் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் நடத்தப்பட்ட விசாரணைகளிலேயே, மலையகப் பெண்களுக்கு ரிஷாத் பதியுதீன் வீட்டில் இடம்பெற்ற கொடுமைகள் தொடர்பான தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணி புரிந்த 11 பெண்களுக்கு பல்வேறு துன்புறுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அவர்களில் இருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, இவ்வாறு பணியாற்றிய இருவர் மர்மமான முறையில் உயிரிழந்த சம்பவம் தொடர்பிலும் தற்போது தகவல்கள் வெளியாகியுள்ளன.

மேலும், ஹிஷாலினியை இரவு வேளைகளில் ரிஷாத் பதியுதீனின் வீட்டுக்கு அருகிலுள்ள மின்சாரம் இல்லாத அறையொன்றில் வீட்டின் உரிமையாளர்கள் பூட்டி வைத்திருந்தனர் எனவும் தெரியவந்துள்ளது.

இரவு வேளைகளில் மலசலகூடத்துக்குச் செல்லக்கூட முடியாத நிலையை ஹிஷாலினி எதிர்நோக்கியிருந்தார் எனத் தெரியவந்துள்ளது.

ரிஷாத் பதியுதீனின் வீட்டில் பணி புரிதார் எனக் கூறப்படும் குறித்த 11 யுவதிகளையும், தற்போது கைதுசெய்யப்பட்டுள்ள இடைத்தரகரான பொன்னையாவே அழைத்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்வாறு மலையக யுவதிகளை பணிக்கு அழைத்து வருவதற்காக, ரிஷாத் பதியுதீன் தரப்பிலிருந்து லட்சக்கணக்கான பணத்தை இடைத்தரகர் பெற்றுக் கொண்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படு கின்றது.

எவ்வாறாயினும், இந்தச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸார் மேலும் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

## கப்பம் கோரல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டுக்கள் மற்றும் பல குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக அவர் டுபாய் நாட்டுக்கு தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார்.

மேலும், அவர் களுத்துறை - எதனமடல பகுதியில், சிறைச்சாலை பஸ்ஸுக்குள் கொலை செய்யப்பட்ட ரணாலே சமயங் என்பவரின் உதவியாளர் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தனியார் நிறுவனம் ஒன்றில் கப்பம் பெறத் தயாராகவிருந்தமை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைய குறித்த 4 பேரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

## வடக்கின் புதிய பிரதம.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு மாகாணத்துக்குப் புதிய பிரதம செயலாளராக சமன் பந்துலசேன ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். இது தொடர்பில் ஆராய்வதற்காக வடக்கு மாகாண அவைத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் மற்றும் உறுப்பினர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போதே இவ்வாறு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

இன்றைய கூட்டத்தில் 13 பேர் நேரில் சமூகமளித்து ஜனாதிபதிக்கு அனுப்பும் கடிதத்தில் ஒப்பமிட்டனர். 14 பேர் தொலைபேசி மூலமாக இந்தக் கடிதத்துக்கு ஆதரவைத் தெரிவித்தனர்.

நிர்வாக மொழியான தமிழ் மொழியைக் கொண்ட வடக்கு மாகாண சபையில் மக்களினதும் அதிகாரிகளினதும் தொடர்பாடல் கருதி இப் பதவிக்குப் பொருத்தமான தமிழ் அதிகாரிகளில் ஒருவரை நியமித்து உதவுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என்று கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஹிஷாலினியின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புதிதாக கட்டப்பட்டுள்ள பஸ் நிலையம் வரை சென்று நிறைவடைந்தது.

இதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், யாழ்ப்பாணம் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணன் உள்ளிட்ட அரசியல்வாதிகள், மகளிர் அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## விபத்துகளில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பற்ற பயணம் மற்றும் கவனயீனம் காரணமாகவே அதிக விபத்துக்கள் இடம்பெறுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

# மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மணமக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள **076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வேண்டாம் சீனச் சம்பந்தம்

தமிழர்களின் உண்மையான மனநிலையை மட்டக்களப்பில் நடைபெற்ற கூட்டமொன்றில் வெளிப்படையாகவும் அப்பட்டமாகவும் எடுத்துரைத்திருக்கின்றார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன்.

இலங்கை நாடு ஒன்றாக இருப்பினும் இரண்டு தனித்தனி தேசியங்களை – தேசிய இனங்களை – கொண்டது அது என்பது சரித்திர ரீதியான உண்மை.

கிறிஸ்துவுக்கு முந்திய காலம் வரை தொடர்ந்து செல்லக்கூடிய பாரம்பரியமான – தொன்மைமிக்க – ஆழமான – வரலாற்று வேரோடல்களை இந்த தீவின் பூர்வீகக் குடிகளான தமிழர்களும் சிங்களவர்களும் கொண்டுள்ளனர்.

போர்த்துக்கேயர்கள் 16ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இலங்கையில் காலடி எடுத்து வைத்தபோது இங்கு இரண்டு புராதன அரசுகள் அரசோச்சுவதைக் கண்டனர். வடக்கு, கிழக்கில் தமிழர்கள். தெற்கில் சிங்களவர்கள்.

தனித்தனியான மொழி, பண்பாடு, பழக்கவழக்கங்கள், வழக்காறுகள், ஆட்சி நிர்வாகம் ஆகியவற்றினால் இரண்டு வேறுபட்ட தேசங்களாகவே தமிழர் தாயகமும், தென்னிலங்கை சிங்களமும் 1833 வரை விளங்கி வந்தன. இந்தத் தீவை வன் கவர்ந்த கடைசி அந்நியரான ஆங்கிலேயர்கள் தங்களது நிர்வாக வசதிக்காக இரண்டு தேசங்களையும் ஒரு நாடாக இணைத்தனர்.

அந்த அரசியல் நடவடிக்கையின் விளைவைத்தான் இன்றுவரை இனப்பிரச்சினையாக இந்த நாடு அனுபவித்து வருகின்றது.

சிங்களதேசம் தன்னுடைய பெரும்பான்மைப் பலத்தை பயன்படுத்தி தமிழர் தேசத்தையும் கபளீகரம் செய்து பலவந்தமாக ஆட்சி செய்து வருகின்ற போதும் – அதிகாரத்தினால் அடக்கி ஆளுகின்ற போதும் – இரண்டு தேசங்களுக்கும் அல்லது இரண்டு தேசியங்களுக்கும் இடையில் நல்லுறவான நிலைமை இன்றுவரை நீடிக்கவே இல்லை என்பதுதான் யதார்த்தப் புற உண்மையாகும். எண்ணிக்கையில் பெரும்பான்மையினர் என்ற வலிமையின் மூலம் பெற்றுக்கொண்ட அதிகாரப் பலத்தை வைத்துக்கொண்டு சிங்கள தேசம், தமிழர் தாயகத்தை அடக்கி, ஒடுக்கி ஆண்டு கொண்டிருந்தாலும், இரண்டு தேசங்களுக்கும் இடையில் நல்லிணக்கம் ஏற்படவே இல்லை என்பதுதான் நிலைமை.

அடக்குபவன் – அடக்கப்படுபவன், ஆள்பவன் – ஆளப்படுபவன் என்ற அடக்குமுறை ஆட்சி நிலையே இங்கு நீடிக்கின்றது.

அந்த முறைமையில், தீவின் சர்வதேச ஊடாட்டம் கூட அப்படித்தான் தொடர்கின்றது தென்னிலங்கை ஆட்சிப்பீடம் பௌத்த கலாசாரத்தில் ஊறிய சீனாவின் காலடியில் விழுந்து கிடக்கிறது.

மொழி, மதம், வாழ்க்கைமுறை போன்றவற்றாலும் தொப்புள் கொடி உறவாலும் தமிழகத்தை உள்ளடக்கிய இந்தியாவோடு தன்னை எப்போதும் அடையாளப்படுத்தி நிற்கின்றது தமிழர் தேசம். அண்ணன் – தம்பி முரண்பாடு போல தமிழகத் தமிழர்களுக்கும் இலங்கை தமிழர்களுக்கும் இடையில் அவ்வப்போது பூசல்கள் வந்தாலும் கூட, தமிழர்கள் என்ற முறையில் அவர்கள் ஒற்றுமைபட்ட கருத்து நிலைப்பாட்டையே எப்போதும் பிரதிபலித்து வந்துள்ளனர்.

அதுபோல தமிழகத்தை உள்ளடக்கிய பாரத தேசமும் இலங்கை தமிழர்கள்பால் எப்போதும் பரிவும் கவனிப்பும் சிரத்தையும் கொண்டு விளங்குவது கண்கூடு.

இந்தப் பிராந்தியத்தில் வல்லாதிக்க சக்திகளான – தமக்குள் அயல் தேசங்களான – சீனாவும் இந்தியாவும் தமக்குள் முட்டிமோதி, முரண்பட்டு, பகைமை பாராட்டி நிற்கின்றன.

இந்த முரண்பாட்டில் குளிர் காய்கின்றது தென்னிலங்கைச் சிங்களம். தனக்கு நேரடியான அயல் தேசமான இந்தியாவைப் புறக்கணித்து, சீனத்துடன் கைகோர்த்துள்ள இலங்கை, இலங்கையில் சீனாவின் ஆதிக்கத்துக்கும் காலூன்றலுக்கும் இடமளித்து, இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாகவும் ஆபத்தாகவும் மாறும் சூழலுக்கு வாய்ப்பும் அளித்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில்தான் இலங்கை தமிழர்கள் எப்போதும் இந்தியாவுடன்தான் இருக்கின்றார்கள், சீனாவுடன் அல்ல என்ற உண்மையை அறுதியிட்டு வெளிப்படுத்தி இருக்கின்றார் சுமந்திரன்.

2012 ஆம் ஆண்டில் இருந்து இலங்கைத் தமிழர்களின் நலன்களை முன்னிறுத்தி, இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் கொண்டுவரப்பட்டு, நிறைவேற்றப்பட்ட எல்லாத் தீர்மானங்களின் போதும், இலங்கை அரசுக்கு சார்பான – இலங்கை தமிழர்களுக்கு மாறான – நிலைப்பாட்டையே சீனா எடுத்து வந்து இருக்கின்றது என்பதை சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தகைய சீனாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகரிக்கின்றமையை ஈழத்தமிழர்கள் துளியளவும் விரும்பவில்லை என்று வெளிப்படுத்தியிருக்கின்றார் சுமந்திரன்.

இத்தகைய நிலைப்பாட்டை எடுத்து நிற்கும் சீனாவுடன் தமிழ் தலைமைகள் ஒப்பாசாரத்துக்கும் கூட நட்புறவு பேண வேண்டிய தேவை இல்லை என்பதுதான் யதார்த்தம். சீன – இலங்கை நட்புறவுக்கு பல்வேறு வகைகளிலும் களம் அமைக்கும் தமிழர் தலைமைகளுக்கு இந்த விடயம் சமர்ப்பணம்.

# கறுப்புப் பணம் நாட்டுக்கு வருவது தொடர்பிலும் இயற்றப்படுகிறது சட்டம்

## எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு



வெளிநாட்டிலுள்ள கறுப்புப் பணத்தை நாட்டுக்குள் கொண்டு வரும் நடவடிக்கை தொடர்பில் சட்டம் இயற்றப்படுகின்றதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

நேற்று (வெள்ளிக்கிழமை) மாளிகைக்காடு அந்நூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மீனவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது எம்.ஏ.சுமந்திரன் மேலும் கூறியுள்ளவை வருமாறு -

நிதி சட்டத்தை திருத்துவதற்கான ஒரு சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அதாவது வெளிநாட்டில் உள்ள கறுப்புப் பணத்தை நாட்டுக்குள் கொண்டு வருவது தொடர்பாக சட்டமொன்றை இயற்றுவதற்கு நிதியமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

எனினும் கறுப்புப் பணத்தை யார் கொண்டு வரப்போகின்றார்கள் என்பது உங்களுக்கு தெரியும்.

மேலும் இந்த விடயத்தை சவாலுக்கு உட்படுத்த பல மனுக்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோம். கறுப்பு பணத்தை வெள்ளையடிக்கும் பொறிமுறையும் மேற்கொள்ளப்படுகின்றது. - என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு கடினம்

## வர்த்தக அமைச்சர் பந்துல கையைவிரித்தார்



கொழும்பு, ஜூலை 24

2020 ஆம் ஆண்டில் அரசாங்கத்தின் வருவாயில் 86 சதவிகிதம் சம்பளம் மற்றும் ஊதியம் வழங்குவதற்காக செலவிடப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

எனவே ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்க இது பொருத்தமான நேரம் அல்ல என்றும் வர்த்தக அமைச்சர் மேலும் கூறினார்.

ஆசிரியர்களுக்கான 100 சதவீத ஊதிய உயர்வுக்குதாம் முழுமையாக உடன்படுகிறேன் என தெரிவித்த அவர், பொருளாதார நெருக்கடி அதற்கான சாத்தியத்தைக் குறைத்துள்ளது என்றும் தெரிவித்தார்.

நலன்புரி நடவடிக்கைகளை அதிகரிக்க விரும்பினால் அரசாங்கத்துக்கு மேலும் வரி விதிக்க வேண்டிய சூழல் ஏற்படும் என அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக்காட்டினார்.

அவ்வாறு வரிவிதித்தால் மக்களுக்கு மேலும் சுமையாக அமைந்துவிடும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# கொரோனா மூன்றாவது அலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம்

## தமிழ் மக்கள் கூட்டணியால் ஒழுங்கமைப்பு





யாழ்ப்பாணம், ஜூலை 24

கொரோனா 3 ஆம் அலையால் பாதிக்கப்பட்ட மக்கள் ஆங்காங்கே முடக்கப்பட்டுள்ள நிலையில் அவர்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருள்கள் உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதற்கு புலம்பெயர் சமூகத்தின் உதவியுடன் தமிழ் மக்கள் கூட்டணியால் 10 லட்சம் ரூபா பணத்தை பெற்று உலருணவுகள் வழங்கப்பட்டன.

இந்த உதவு தொகையில் இருந்து சுமார் 450 தொடக்கம் 500 வரையான உணவுப் பொதிகள் பொதி செய்யப்பட்டு பல்வேறு இடங்களிலும் உணவுக்காக சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு வழங்கப்பட்டன. அதன் ஒரு தொகுதியாக கடந்த வியாழக்கிழமை சுமார் 200 பொதிகள் பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

இந்த உதவிகள் கவனமாக ஆராயப்பட்டு முன்னுரிமை அடிப்படையில் கீழ் வழங்கப்பட்டுவருகின்றன. இத ஒரு அங்கமாக ஆதிகோவிலடியில் முடக்கப்பட்ட மக்கள் நீண்ட நாள்களாகத் தொடர்ச்சியாக முடக்கப்பட்டு வருகின்றமையால் அவர்களுக்கு உணவுப் பற்றாக் குறை காணப்படுகின்றது. இதனால் முடக்கப்பட்ட இம் மக்கள் அனைவரும் உணவுத் தேவைக்காக உதவிகளை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றார்கள். முன்னுரிமை அடிப்படையில் இவர்களுக்கு ஏற்கனவே 150 பொதிகள் அனுப்பி வைக்கப்பட்டன.

இரண்டாம் கட்டமாக அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க 30 பொதிகள் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டன.

# தேரர்கள் சிலருக்கும் கொரோனாத் தொற்று

ஹபராதுவ - லியனகொட பகுதியிலுள்ள விகாரை ஒன்றிலுள்ள 14 தேரர்களுக்கும் மேலும் மூவருக்கும் கொரேனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஹபராதுவ சுகாதார பொது சுகாதார வைத்திய அதிகாரிகள் சங்கம் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து அவர்களுடன் தொடர்பைப் பேணியவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

# முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழர்களின் வசதி, வாழ்வாதாரத்தை மேம்படுத்த வேண்டும்

## மு.க.ஸ்டாலின் உத்தரவு




தமிழ்நாட்டில் உள்ள முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களின் அடிப்படை வசதிகளையும் வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த வேண்டும் என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்று தலைமைச் செயலகத்தில், பொது மற்றும் மறுவாழ்வுத் துறையின் வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வரும் இலங்கைத் தமிழ் அகதிகள் மறுவாழ்வு, வெளிநாடு வாழ் தமிழர்கள் நலன், தாயகம் திரும்பியோர் மறுவாழ்வு, முன்னாள் படைவீரர்கள் நலன் உள்ளிட்ட பல்வேறு பணிகளின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

தலைநிமிரும் தமிழகம் தொலைநோக்குத் திட்டங்களில் அறிவுறுத்தியபடி வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் பேணிடவும், அங்குப் பாதிப்புக்கு உள்ளானோர்க்கு உதவிடவும், நாடு திரும்பிய வெளிநாடுவாழ் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்குத் துணைநிற்கவும், வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை என்ற ஒரு புதிய துறையை அமைப்பதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், வெளிநாடு வாழ் தமிழர்கள் நலவாரியம் அமைப்பதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வழிகாட்டுதல் குழு அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், முகாம் வாழ் இலங்கைத் தமிழர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கும், குடிநீர், கழிவறை வசதி, தெருவிளக்கு, மின்வசதி உள்ளிட்ட பல்வேறு அடிப்படை வசதிகளை மேம்படுத்திடவும், மாதாந்திர பணக்கொடையை உயர்த்தி வழங்கிடவும், சமையல் பாத்திரங்கள் மற்றும் துணிமணிகள் வழங்குவதற்கான ஒதுக்கீட்டினை உயர்த்தி வழங்கிடவும் நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொண்டார்.

இலவசசமையல் எரிவாயு இணைப்பு வழங்கவும், திறன் மேம்பாட்டுப் பயிற்சி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ள முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளார். வெளிநாடு வாழ் தமிழர்களுக்குத் காப்பீட்டுத் திட்டம், அடையாள அட்டை, கட்டணமில்லா தொலைபேசி உதவி மையம், வெளிநாடு வாழ் தமிழர்களின் குழந்தைகளுக்குத் தமிழ் மொழியை இணைய வழியில் கற்பிப்பதற்குத் தமிழ் இணையக் கல்விக் கழகம் அமைப்பது ஆகியவை தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டது.

புதியதாக முன்னாள் படைவீரர் நல அலுவலகங்களை தோற்றுவிக்க ஆய்வுகள் மேற்கொண்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்திய முதலமைச்சர் அவர்கள், முன்னாள் படைவீரர் நலவாரியத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டதுடன், முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினருக்குப் பயனளிக்கும் வகையில், திறன் மேம்பாடு, வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு முக்கியத்துவம் அளித்து, திட்டமிட்டுச் செயல்பட வேண்டும் என்றும் அவர் அறிவுரை வழங்கினார்.

## அ.தி.மு.க. பொறுப்புகளுக்கு செயலாளர்கள் நியமனம்



அ.தி.மு.கவில் மகளிரணி, இலக்கிய அணி, வர்த்தக அணி உள்ளிட்ட பொறுப்புகளுக்கு செயலாளர்களை ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம், இணை ஒருங்கிணைப்பாளர் எடப்பாடி பழனிசாமி இருவரும் நியமனம் செய்துள்ளனர்.

இதுதொடர்பாக ஒருங்கிணைப்பாளர்கள் இருவரும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிவிப்பில், அ.தி.மு.க. இலக்கிய அணிச்செயலாளர் பொறுப்பில் இருக்கும் பா.வளர்மதி, கொள்கை பரப்பு துணைச் செயலாளர் பொறுப்பில் இருக்கும் வைகைச்செல்வன் ஆகிய இருவரும் அவரவர் வகித்து வரும் பொறுப்புகளில் இருந்து விடுவிக்கப்பட்டு வேறு பொறுப்புகளுக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

மகளிர் அணி செயலாளராக பா.வளர்மதி, மகளிர் அணி இணைச் செயலாளராக மரகதம் குமரவேல், இலக்கிய அணிச் செயலாளராக வைகைச் செல்வன், வர்த்தக அணிச் செயலாளராக ஷா.ஹி.ஸ்ரீ.வெங்கட்ராமன், இணைச்செயலாளராக ஆனந்தராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர் என அறிவிப்பு வெளியாகியுள்ளது.

## தமிழகத்தில் வரும் 28 ஆம் திகதி அன்று அ.தி.மு.க. சார்பில் கவனயீர்ப்புப் போராட்டம்



தமிழகம் முழுவதும் வரும் 28 ஆம் திகதி தி.மு.க. அரசுக்கு எதிராக அ.தி.மு.க. ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவரும் வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது

தேர்தலின்போது அறிவித்த வாக்குறுதிகளை தி.மு.க. அரசு நிறைவேற்றவில்லை என ஓ.பி.எஸ்., ஈ.பி.எஸ். குற்றஞ்சாட்டியுள்ளனர். நீட்தேர்வு, பெற்றோல் டீசல் விலை குறைப்பு போன்றவற்றையும் நிறைவேற்றவில்லை. அ.தி.மு.கவை அழிக்கலாம், ஒழித்து விடலாம் என கனவு கண்டால் அது பகல் கனவாகவே முடியும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தி.மு.க .ஆட்சிக்கு வந்த பின்னர் அந்த ஆட்சிக்கு எதிராக முதல் முறையாக தமிழகம் முழுவதும் அ.தி.மு.கவினால் ஆர்ப் பாட்டம் நடத்தப்படவுள்ளது என்பது குறிப் பிடத்தக்கது.

## வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் ஆகாஷ் ஏவுகணை சோதனை வெற்றி



ஒடிசா கடற்கரைப் பகுதியில் உள்ள ஒருங்கிணைந்த பரிசோதனை மையத்தில் இருந்து இன்று ஆகாஷ் ஏவுகணை வெற்றிகரமாக பரிசோதிக்கப்பட்டது.

சோதனையின் போது திட்டமிடப்பட்ட 30 கி.மீ. தூர இலக்கை இந்த ஏவுகணை வெற்றிகரமாக தாக்கி இலக்கை அழித்துள்ளது. 2.5 மாக் வேகத்தில் செல்லக்கூடிய ஆகாஷ் ஏவுகணை (ஆகாஷ் - என்.ஜி.) தரைப் பரப்பிலிருந்து 60 கி.மீ. தொலைவு வரை விண்ணில் உள்ள இலக்கைத் தாக்கி அழிக்கும் சக்தி கொண்டது. கடந்த 3 நாள்களில் இந்தியப் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு மேற்கொண்ட மூன்றாவது ஏவுகணைச் சோதனை இதுவாகும்.

தரையில் இருந்து வான் இலக்கைத் தாக்கி அழிக்கும் புதிய தலைமுறை ஆகாஷ் ஏவுகணையை இந்தியபாதுகாப்பு ஆராய்ச்சி, மேம்பாட்டு அமைப்பு (டி.ஆர்.டி.ஓ.) வெற்றிகரமாக சோதித்துள்ளது.

இதுகுறித்து இந்திய பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், பாதுகாப்புத் துறையைச் சேர்ந்த நிறுவனங்களுடன் இணைந்து டி.ஆர்.டி.ஓ. தயாரித்துள்ள ஆகாஷ் என்.ஜி. ஏவுகணை

## ஜெயலலிதா மரண விசாரணை ஆணையத்துக்கு தமிழக அரசு மேலும் கால நீடிப்பை வழங்கியது



ஜெயலலிதா மரணம் தொடர்பாக விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட ஆறுமுகசாமி விசாரணை ஆணையத்திற்கு கொடுக்கப்பட்ட கால அவகாசம் வரும் 24 ஆம் திகதியுடன் முடிவடையும் நிலையில், 11 ஆவது முறையாக 6 மாத கால நீடிப்பு செய்து தமிழக அரசு உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஜெயலலிதா மரணத்தில் மர்மம் இருப்பதாக வந்த புகாரின் அடிப்படையில் 2017 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 25 ஆம் திகதி இந்த விசாரணை ஆணையம் அமைக்கப்பட்டது. மேலும் 3 மாதத்திற்குள் விசாரணையை முடித்து அறிக்கை தாக்கல் செய்யவும் தமிழக அரசு அரசாணை பிறப்பித்தது.

இதையடுத்து மருத்துவர்கள், செவிலியர்கள், ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். அதிகாரிகள், போயஸ் கார்டன் பணியாளர்கள் என்று 154 பேரிடம் ஆணையம் தீவிரமாக விசாரணை நடத்திவந்தது.

இந்த நிலையில், இந்த ஆணையத்தின் விசாரணைக்குத் தடை விதிக்க கோரியும், ஜெயலலிதாவுக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்து 21 டாக்டர்கள் அடங்கிய நிபுணர் குழு மூலம் விசாரணை நடத்த உத்தரவிடக் கோரியும் சென்னை உயர்நீதிமன்றத்தில் அப்போலோ மருத்துவமனை நிர்வாகம் வழக்குத் தொடர்ந்தது.

இந்த வழக்கை கடந்த ஆண்டு விசாரித்த சென்னை உயர்நீதிமன்றம், இந்த வழக்கு தொடர்பாக 90 சதவீதம் ஆணையம் விசாரணை முடித்துள்ளதால் அப்போலோ கோரிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறி வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக அப்போலோ தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்ச நீதிமன்றம் ஆறுமுகசாமி ஆணையத்தின் அனைத்து விசா ரணைக்கும் கடந்த 2019 ஏப்ரல் 26 ஆம் திகதி இடைக்கால தடை விதித்தது. இந்த தடை உத்தரவை ரத்து செய்யவும், வழக்கை விரைந்து விசாரிக்கக் கோரியும் தமிழக அரசு சார்பில் இடைக்கால மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் ஜெயலலிதாவின் மரணத்தை விசாரிக்கும் ஆறுமுகசாமி ஆணையத்திற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடையை நீக்கக் கோரிய தமிழ்நாடு அரசின் இடையீட்டு மனு வரும் 26 ஆம் திகதி உச்ச நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது

# தென் ஆபிரிக்க முன்னாள் அதிபர் ஜேக்கப் சூமா பிணையில் விடுதலை



தென்னாபிரிக்காவின் அதிபராக கடந்த 2009ஆம்ஆண்டுமுதல் 2018 ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தவர் ஜேக்கப் சூமா. இவர் பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுகளுக்கு ஆளானார்.

ஆளும் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் தலைவராக அதிபா பதவி வகிக்கும் சிறில் ராமபோசா தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில், ஜேக்கப் சூமா கடந்த 2018 ஆம் ஆண்டு ராஜினாமா செய்துள்ளார்.

சூமாவுக்கு எதிராக நடைபெற்று வரும் பல்வேறு ஊழல் வழக்குகளில் அவர் நேரில் ஆஜராகாததால் நீதிமன்ற அவமதிப்பில் ஈடுபட்டார் அவருக்கு கடந்த மாதம் 29 ஆம் திகதி 15 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதனைத் தொடாந்து, கடந்த 7 ஆம் திகதி ஜூமா பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

இந்நிலையில், சூமாவுக்கு பிணை வழங்கப்பட்டுள்ளது. அவரது சகோதரா் மைக்கேல் சூமாவின் இறுதிச்சடங்கில் பங்கேற்க கருணை அடிப்படையில் அவருக்கு இந்த பிணை அளிக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனா.

# எடியூரப்பா இல்லையெனில் பா.ஜ.க. இல்லை சுப்பிரமணியன் சுவாமி கருத்து வெளியீடு



கர்நாடக முதல்வராகக் கடந்த இரு ஆண்டுகளாகத் தொடர்ந்து வரும் பி.எஸ். எடியூரப்பாவுக்கு எதிராக ஆளும் பா.ஜ.க.கட்சியில் உள்ள எம்.எல்.ஏக்கள் போர்க்கொடி தூக்கியுள்ளனர். இதனையடுத்து அவர் இல்லாவிட்டால் கர்நாடகாவில் பா.ஜ.க. இல்லை என்று சுப்பிரமணியன் சுவாமி தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் சி.பி.யோகேஷ்வர், பா.ஜ.க. எம்.எல்.ஏக்கள் பசனகவுடா எத்னால், அரவிந்த் பெல்லத் உள்ளிட்டோர் எடியூரப்பாவை பகிரங்கமாக ஊடகங்களிலும் பொது மேடைகளிலும் விமர் சித்து வருகின்றனர்.

இந்த நிலையில் எடியூரப்பா தனது மகன் விஜயேந்திராவுடன் கடந்த வாரம் டெல்லி சென்று பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேசினார். அப்போது தான் முதல்வர் பதவியிலிருந்து விலகத் தயாராக இருக்கிறேன் என பிரதமர் மோடியிடம் எடியூரப்பா கூறினார் எனத் தெரிகிறது. எடியூரப்பா ஆதரவாளர்கள் கர்நாடக மாநிலத்தின் பல்வேறு இடங்களில் போராட்டத்தில் ஈடுபடத்தொடங்கிஇருப்பதால், அவர்களைச் சமாதானம் செய்யும் வகையில் நேற்றும் அவர் டுவிட்டரில் கருத்துத் தெரிவித்தார்.

இது குறித்து சுப்பிரமணியன் சுவாமி, கர்நாடகாவில் முதன்முதலில் பா.ஜ.க. ஆட்சியைக் கொண்டுவந்தவர் எடியூரப்பா. அவரை நீக்க சதி நடக்கிறது. அவர் இல்லாமல் மாநிலத்தில் பா.ஜ.கவை நடத்த முடியாது. பா.ஜ.கவுக்கு மீண்டும் எடியூரப்பா வந்தபின்தான் வெற்றி பெற முடிந்தது. எதற்காக மறுபடியும் அதே தவறைச் செய்கிறீர்கள் எனத் தெரிவித்துள்ளார்.

# பிலிப்பைன்ஸில்நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவு

பிலிப்பைன்ஸ் நாட்டின் கலடாகன் பகுதிக்கு தென் மேற்கே நேற்றிரவு 8.49 மணியளவில் சக்தி வாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டு உள்ளது. இது ரிக்டர் அளவில் 6.8 ஆக பதிவாகி உள்ளது.

இதனை அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்து உள்ளது. இந்த நிலநடுக்கம் 104.3 கி.மீ. ஆழத்தில் மையம் கொண்டிருந்தது எனவும், இதனால் ஏற்பட்ட சேதங்கள் உள்ளிட்ட பிற விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை.

# ஆப்கானில் 200 மாவட்டங்கள் தலிபான்கள் வசமாகின

20 ஆண்டுகளாக ஆப்கானிஸ்தானில் முகாமிட்டு இருந்த அமெரிக்கா மற்றும் அதன் நேசநாட்டு படைகள் ஆப்கானிஸ்தானில் இருந்து வெளியேறி வருகின்றன. அக்டோபர் மாதத்துக்குள் அனைத்துப் படைகளும் முற்றிலும் வாபஸ் பெறுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்கப் படைகள் வாபஸ் ஆவதை தங்களுக்கு சாதகமாக்கிக்கொள்ள தலிபான் தீவிரவாதிகள், நாட்டை மீண்டும் கைப்பற்ற தீவிரமாக முயற்சித்து வருகிறார்கள்.

ஆப்கானிஸ்தானில் 400 மாவட்டங்கள் உள்ளன. இதில் 200 மாவட்டங்கள் வரை தற்போது தலிபான்கள் வசம் சென்றுள்ளன என தெரிய வந்துள்ளது. முதலாவதாக ஆப்கானிஸ்தானின் எல்லைப்பகுதிகள் முழுவதையும் கைப்பற்ற அவர்கள் முயற்சித்து வருகிறார்கள்.

ஆப்கானிஸ்தானின் எல்லைப்பகுதியில் பாகிஸ்தான், ஈரான், கஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் ஆகிய நாடுகளின் எல்லைகள் உள்ளன. இதில் கஜிகிஸ்தான் எல்லை முழுவதையும் தலிபான் தீவிரவாதிகள் கைப்பற்றிவிட்டனர். உஸ்பெகிஸ்தானின் பெரும் பகுதி அவர்கள் வசம் உள்ளது.

90 சதவீத எல்லைப் பகுதிகளை கைப்பற்றிவிட்டோம் என தலிபானின் செய்தி தொடர்பாளர் முஜாகித் தெரிவித்துள்ளார். "ஒட்டுமொத்த எல்லைப் பகுதி முழுவதையும் நாங்கள் விரைவில் கைப்பற்றிவிடுவோம்.

அதே நேரத்தில் வெளிநாட்டு தீவிவாத அமைப்புகள் ஆப்கானிஸ்தானில் செயல்பட அனுமதிக்க மாட்டோம். குறிப்பாக ஐ.எஸ். அமைப்புக்கு ஆப்கானிஸ்தானில் இடம் அளிக்க முடியாது" என்று கூறி உள்ளார்.

# மியன்மாரில் ராணுவ ஆட்சிக்கு எதிராக சிறையில் போராட்டம்

மியன்மாரில் கடந்த பெப்ரவரி மாதம் முதலாம் திகதி முதல் ராணுவ ஆட்சி நடந்து வருகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அங்கு பல மாதங்களாக போராட்டங்கள் நடந்து வருகின்றன.

மருத்துவர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு அரசு ஊழியர்களும் ராணுவ ஆட்சிக்கு எதிராக ஒத்துழையாமை இயக்கத்தை அறிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக தற்போது சிறையில் உள்ள கைதிகள் ராணுவ ஆட்சிக்கு எதிராகப் போராட்டத்தில் குதித்துள்ளனர். யாங்கூன் நகரில் உள்ள இன்சைன் என்கிற சிறை அந்த நாட்டின் மிகவும் மோசமான சிறையாக அறியப்படுகிறது. முந்தைய அரசின் மூத்த அதிகாரிகள் பலரும், ராணுவ ஆட்சிக்கு எதிரான போராட்டத்தில் கைது செய்யப்பட்ட நபர்களும் இந்த சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இந்தநிலையில் நேற்று இந்த சிறையில் உள்ள கைதிகள் அனைவரும் திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர். ராணுவ ஆட்சிக்கு எதிரான பாடல்களை பாடியும் கண்டன கோஷங்களை எழுப்பியும் கைதிகள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர். கைதிகள்



சுமார் 2 மணி நேரத்துக்கு விடாமல் கோஷங்களை எழுப்பினர் என சிறைக்கு அருகே உள்ள குடியிருப்பு வாசிகள் தெரிவித்தனர்.

மேலும் கைதிகளின் போராட்டத்தைத் தொடர்ந்து ராணுவ வாகனங்கள் சிறைக்குள் சென்றன எனவும், அறைக்கு வெளியே ஏராளமான இராணுவ வீரர்கள் குவிக்கப்பட்டனர் எனவும் குடியிருப்புவாசிகள் குறிப்பிட்டனர். எனினும் கைதிகளின் இந்தப் போராட்டம் குறித்து கருத்து தெரிவிக்க சிறை நிர்வாகம் மறுத்து விட்டது.

இறைச்சிக் கோழி விற்பனை

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்

குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

ST.ANTONY'S COMPUTER




99,000/= முதல்

021 222 4865
075 069 8608
189, K.K.S Road, Jaffna Town.

# அநியாயத்திற்கு எதிராக எப்போதும் குரல் கொடுப்பேன் அது யாராக இருந்தாலும் பரவாயில்லை - சாணக்கியன்




பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் ஜனாஸா குறித்து கோஷம் எழுப்பினேன் ஆனால் இன்று நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனின் வீட்டில் மரணமான சிறுமி குறித்து நீதி நிலை நாட்டப் பட வேண்டும் என குறிப்பிட்டேன் அது குறித்து பல விமர்சனங்கள் எழுகின்றன. அநியாயத்திற்கு எதிராக எப்போதும் குரல் கொடுப்பேன் அது யாராக இருந்தாலும் பரவாயில்லை என்றார்.

பலதடவைகள் அரசுடனும் , அமைச்சர்களுடனும் மீனவர்களின் பிரச்சினைகளை பேசியுள்ளேன். ஆனால் எவ்வித பயனுமில்லாமல் இருக்கும் இவர்களுக்கு பாடம் புகட்டும் நடவடிக்கையாக அம்பாறை - கல்முனை வீதியை அரை மணித்தியாலமாவது முடக்கி மீனவர்களின் பிரச்சினையை உரியவர்கள் கவனத்திற்கு கொண்டு செல்ல வேண்டும். முடக்குங்கள் என்று நான் கூற மாட்டேன். முடக்கி உங்கள் சக்தியை காட்டுங்கள் என்று தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட மீனவர்களின் படகுகளிலிருந்து ஆழ்கடலில் வைத்து களவாடப்படும் மீன்கள், சுருக்குவலைகள் தொடர்பில் நேற்று மாளிகைக்காடு அந்நூர் கலாசார மண்டபத்தில் நடைபெற்ற மீனவர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் அங்கு உரையாற்றிய அவர், அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம் எம்.பிக்கள் பலரும் உள்ள நிலையிலும் என்னையும் இங்கு கலந்து கொண்டிருக்கும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமத்திரனையும், நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசனையும் அழைத்தமைக்கு நன்றிகளை தெரிவித்து கொள்கிறேன்.

கல்முனை பிரதேச செயலக விவகாரத்தில் ஒன்றுமில்லை. அதை வைத்து அரசியலை மட்டுமே செய்கிறார்கள். அந்த செயலகத்தை தரமுயர்த்துவதனால் முஸ்லிகளுக்கு எவ்வித நஷ்டமும் இல்லை. பெயர் பலகையில் மாற்றம் வருமே தவிர தமிழர்களுக்கும் பெரிதாக ஒன்றும் கிடைக்கப்போவதுமில்லை.

இது தொடர்பில் நான் பெரிதாக பேசுவதில்லை என்கிறார்கள். இதில் பேச ஒன்றுமில்லை. இதனை வைத்து கொண்டு அரசியல் மட்டுமே நடக்கிறது. சந்தர்ப்பம் வரும் போது மீனவர்களின் பிரச்சினையை பற்றி நாடாளுமன்றத்தில் பேசுவேன். கல்முனை பிராந்தியத்திற்கு தடுப்பூசி வழங்கவேண்டும் என்று நான் மட்டுமே நாடாளுமன்றத்தில் பேசினேன் என்றார்.

# மக்களுக்கு கிடைத்திருக்கும் அரிய வாய்ப்பை கட்டாயம் பயன்படுத்தி கொள்ள வேண்டும்

## அக்கரைப்பற்று முதல்வர் கோரிக்கை

அக்கரைப்பற்று சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய எல்லைக்குள் வசிக்கும் மக்களுக்கு கொரோனா தடுப்பூசி வழங்கும் செயற்திட்டம் இன்று முதல் ஆரம்பமாகிறது எனும் நற்செய்தி மக்களை வந்தடைந்திருக்கிறது. கொவிட் - 19 தீவிரத்தை இயலுமானவரை இந்நாட்டை விட்டு ஒழிப்பதற்கு அறிவார்ந்த மக்களின் முன்னால் இருக்கும் ஆக்கபூர்வமான சுகாதார பாதுகாவல் கேடயம் தடுப்பூசிகள் செலுத்துவதே ஆகும். அரசினால் கிடைத்திருக்கும் இந்த அரிய வாய்ப்பினை தேவையுடையவர்கள் கட்டாயம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என அக்கரைப்பற்று மாநகர சபை முதல்வர் அதா உல்லா அகமட் ஸகி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



கொரோனா பெரும் தொற்றுப் பரவல் நமது நாட்டிலும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கும் நிலையில், ஆபத்தான இத்தொற்றில் இருந்து எமது மக்களை பாதுகாத்திட சிறந்த தீர்வு தடுப்பூசிகளே ஆகும். வெள்ளம் வருவதற்கு முன் அணை கட்ட வேண்டும் என்பது சான்றோர் வாக்கு. அந்தவகையில், கொரோனாவின் கோரம் பெறுமதி வாய்ந்த நமது உயிர்களை ஆட்கொள்ளும் முன் நாம் தடுப்பூசி எனும் நோய் எதிர்ப்பு பாதுகாப்பு கவசத்தை தேர்ந்தெடுத்தல் அவசரமானதும், அவசியமானதுமாகும்.

கொவிட் 19 தடுப்பூசிகள் செலுத்துவதன் ஊடாக நம்மையும், நமது அன்பானவர்களையும், சுற்றத்தையும், முழு பிராந்தியத்தையும், நம் தாய் நாட்டினையும் அபாயம் மிக்க வைரஸின் பிடியில் இருந்து மீட்டெடுக்க முடியும். எனவே, பொறுப்பு வாய்ந்த ஒரு மாநகர முதல்வராய் நான் உங்களிடம் வேண்டிக் கொள்வது ஏலவே, தடுப்பூசிகள் செலுத்துவதன் அனுகூலங்கள் குறித்து சுகாதார நிபுணர்கள் போதியளவு நமக்கு அறிவுறுத்தி இருக்கின்றனர். அது போல யார் யார் தடுப்பூசியினை செலுத்திக் கொள்ள முடியும் என்கிற பூரண விவரங்களும் தரப்பட்டுள்ளன.

எனவே,பிரதேசத்தின் சுகாதாரப் பாதுகாப்பில் முழு அக்கறையுடன் செயற்பட விரும்பும் கருங்கொடி மண்ணின் கனிவான மக்கள் கொவிட் 19 தடுப்பூசி வழங்கும் செயற்திட்டத்திற்கு பூரண ஒத்துழைப்பினை நல்க வேண்டுமென வினயமாக வேண்டிக் கொள்கிறேன் என கூறப்பட்டுள்ளது

# பொத்துவில் பிரதேசத்தில் கடுமையான கட்டுப்பாடுகள்

பொத்துவில் பிரதேசத்தில் கொரோனாத் தொற்றுப் பரவலை கட்டுப்படுத்தும் முகமாக நேற்று முதல் மறு அறிவித்தல் வரை கடும் கட்டுப்பாடுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில், பொத்துவில் பிரதேசத்திலுள்ள சகல வர்த்தக நிலையங்களும் தினமும் காலை 7 மணி முதல் பி.ப. 2 மணிவரை மட்டுமே திறப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது என, பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எச்.அப்துல் றஹீம் தெரிவித்தார்.

பொத்துவில் கொரோனாத் தடுப்பு செயலணியின் குழு கூட்டத்தில் இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றார்.

தனிமைப்படுத்தல் சட்டத்தின் பிரகாரம் முற்றாக முடக்கப்பட்டுள்ள பிரதேசங்களான பொத்துவில் 09 குண்டுமடு, மற்றும் 13 பாக்கியாவத்தை பிரதேசம் ஆகியன தொடர்ந்தும் முடக்க நிலையில் இருக்கும் என்பதுடன், தொற்றுப் பரவல் நிலைமைகளைக் கருத்தில் கொண்டு முடக்கப்பட்ட பிரதேசங்களை மீளவும் திறப்பது பற்றி பின்னர் அறிவிக்கப்படும் என்றார்.

தனிமைப்படுத்தப்பட்ட பிரதேசங்களில் தனிமைப்படுத்தல் சட்டத்தினை மீறி சில வர்த்தக நிலையங்கள் திறந்து இருப்பதாகவும், மக்கள் வீதிகளில் நடமாடுவதையும் காணக்கூடியதாக உள்ளது என்றும் தெரிவித்த அவர், இவர்களை கைது செய்வதற்கு பொலிஸாரும், இராணுவத்தினரும் மற்றும் சுகாதாரத் துறையினரும் கூட்டாக இணைந்து விசேட ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

பொத்துவில் பிராந்தியத்தில் கொவிட்- 19 தாக்கம் அதிகரித்து காணப்படுகின்றது. இக் காலத்தில் எக்காரணம் கொண்டும் அத்தியாவசிய தேவைகளைத் தவிர, ஏனைய தேவைகளுக்காக, வெளி மாவட்டங்களுக்கு செல்வற்கு அனுமதி வழங்கப்படமாட்டது என்றும் தெரிவித்த அவர், வீடுகளை விட்டு வெளியேறாமல் இருப்பதே உசிதமானது என்றார்.

# வில்லு குளத்து நீரினைப் பயன்படுத்தி இடைப்போக பயிர்ச்செய்கை முயற்சி



மட்டக்களப்பு பட்டிப்பளை பிரதேசெயலக பிரிவுக்குட்பட்ட கடுக்காமுனை வில்லு குளத்து நீரினைப் பயன்படுத்தி இடைப்போக பயிர்ச் செய்கையினை மேற்கொள்வது தொடர்பான ஆரம்ப கூட்டம் கடுக்காமுனை பகுதியில் நேற்றுக் காலை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பட்டிப்பளை பிரதேச செயலக பிரிவில் கடுக்காமுனை குளத்துநீரினை பயன்படுத்தி இடைப்போக பயிர்ச்செய்கையினை மேற்கொள்வதற்கு 300 ஏக்கர் விவசாய நிலப்பரப்பு நீர்ப்பாசனத்திணைக் களத்தினால் தெரிவுசெய்யப்பட்ட 4 கண்டங்களான கடுக்காமுனை, பண்டாரியாவெளி, படையாண்டவெளி மற்றும் படையாண்டகுளம் ஆகிய கண்டங்களுக்கு எத்தனை ஏக்கர் நிலப்பரப்பு தேவை என்ற முன்மொழிவுகளை விவசாயிகளிடம் இருந்து பெற்று நிலப்பரப்புக்களை 4 கண்டங்களுக்கும் வழங்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதனடிப்படையில் கடுக்காமுனை, பண்டாரியாவெளி மற்றும் படையாண்டவெளி ஆகிய கண்டங்களுக்கு தலா 90 ஏக்கர் நிலப்பரப்பும், படையாண்டகுளம் கண்டத்திற்கு 30 ஏக்கர் நிலப்பரப்பும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு விதைக்கப்படும் நெல்லினம் விதைப்பு ஆரம்ப மற்றும் முடிவு திகதி தண்ணீர் விடும் திகதி உழவுக்கூலி ஏக்கருக்கான அறுவடைக்கூலி என்பற்றுக்கான தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டு ஏகமனதாக அனைத்து கண்ட விவசாயிகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

# கிரான்குளம் மத்தி கிராமத்தில் வீட்டுக்கு அடிக்கல் நாட்டல்

மட்டக்களப்பு மண்முனைப்பற்று பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிரான்குளம் மத்தி கிராம உத்தியோகத்தர் பிரிவில் வறிய நிலையில் வாழ்ந்துவரும் குடும்பம் ஒன்றிற்கான வீட்டுக்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

குறித்த அடிக்கல் நாட்டும் நிகழ்விற்கு முன்னாள் கிழக்கு மாகாண சபையின் உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் பொதுச்செயலாளருமாகிய பூ.பிரசாந்தன் கலந்து கொண்டு, அடிக்கல்லினை நாட்டி வைத்தார்.



இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் வீட்டு உரிமையாளர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

# டோக்கியோ ஒலிம்பிக் முதல் தங்கத்தை வென்றது சீனா
## துப்பாக்கி சுடுதலில் சீன வீராங்கனை சாதனை





டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளில் முதலாவது தங்கப் பதக்கத்தை சீன வீராங்கனை யாங் கிவான் தன் நாட்டுக்காக முதல் தங்கப்பதக்கத்தை வென்றார். 10 மீற்றர் எயார் ரைபிள் துப்பாக்கிச் சுடுதல் பிரிவில் இவருக்குத் தங்கப்பதக்கம் கிடைத்துள்ளது.

முதலாவது வெள்ளிப்பதக்கத்தை ரஷ்ய வீராங்கனை அனஸ்தேஷியா கலாஷினாவும் சுவிட்ஸர்லாந்தின் நீனா கிரிஸ்டன் வெண்கலப் பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

# தொடரைக் கைப்பற்றியது இந்திய அணி
## இலங்கை அணிக்கு ஆறுதல் வெற்றி!



இந்திய அணிக்கெதிரான மூன்றாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேசக் கிரிக்கெட் போட்டியில், இலங்கை அணி டக்வத் லுயிஸ் முறைப்படி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதலிரண்டு போட்டிகளில் இலங்கை அணி தோல்வியடைந்து தொடரை இழந்திருந்தாலும் இந்த இறுதிப் போட்டியின் வெற்றி இலங்கை அணிக்கு ஆறுதல் அளித்துள்ளது.

கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது. போட்டியின் இடைநடுவே மழை குறுக்கிட்டதனால் போட்டி அணிக்கு தலா 47 ஓவர்களுக்குக் குறைக்கப்பட்டது.

ஆயினும் இலங்கை அணியின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாத இளம் இந்திய அணி 43.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 225 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. பிரித்வி ஷா 49 ஓட்டங்களையும் சஞ்சு சம்சன் 46 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் பந்துவீச்சில், அகில தனஞ்சய மற்றும் பிரவீன் ஜயவிக்ரம ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும் துஸ்மந்த சமீர 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இதனைத்தொடர்ந்து 226 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய இலங்கை அணி, 39 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கையடைந்தது. அவிஷ்க பெனார்டோ 76 ஓட்டங்களையும் பானுக ராஜபக்ஷ 65 ஓட்டங்களையும் சேர்த்தனர். இந்திய அணியின் அறிமுக வீரர்களான ராகுல் சஹார் 3 விக்கெட்டுக்களையும் சேட்டன் சக்கரியா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இந்தப்போட்டியின் ஆட்டநாயகனாக அவிஷ்க பெனார்டோவும் தொடரின் நாயகனாக சூர்ய குமார் யாதவும் தெரிவுசெய்யப்பட்டனர்

வேலைவாய்ப்பு
சமையலுக்கு பெண் உதவியாளர் தேவை.
தொடர்புகளுக்கு -
076 740 3814

INDIVIDUAL ENGLISG CLASSES
K. GANESH (BA. Pera)
Grade 7 தொடக்கம் International Schools, பட்டதாரிகள் பட்டதாரி மாணவர்கள் (English Medium உட்பட) தொழில்புரிவோர் , O/L A/L எடுத்தவர்கள் சரளமாக பேசுதற்கு



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# லண்டனில் கறுப்பு ஜூலை கவனவீர்ப்பு








கறுப்பு ஜூலை நினைவு தினத்தை முன்னிட்டு பிரித்தானியாவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கறுப்பு ஜூலை படுகொலையில் கொல்லப்பட்ட வர்களுக்கு நீதிகோரி நேற்று டவ்னிங் ஸ்ட்ரீட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

கறுப்பு ஜூலை தமிழினப் படுகொலை நாள் என்றும் இன அழிப்புக்கு நீதி வேண்டும் என பல்வேறு கோஷங் களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேலும் தொடர்ச்சியாக இன்றும் தமிழர் தாயக பகுதிகளில் இடம்பெற்று வரும் திட்டமிட்ட இனவழிப்பு தொடர்பாகவும் அவர்கள் அதிருப்தி வெளியிட்டனர்.

இதேவேளை தமிழின அழிப்புக்கான நீதி விசார ணைகளின் அவசியத்தையும் அவர்கள் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## டெல்டா தொற்றாளர் மேலும் அதிகரிப்பு

நாட்டில் டெல்டா வகை கொரோனா தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கையில் மேலும் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இதற்கமைய இதுவரை 61 டெல்டா வகை கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கோட்டே, கொலன்னாவ, அங்கொட, நவகமுவ, மாபாகே, கட்டுநாயக்க, நீர்கொழும்பு, இரத்மலானை, பேருவளை, காலி, மாத்தறை, தம்புள்ளை, வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிலேயே இவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## டெல்டாவின் செறிவு 1,000 மடங்கு அதிகம்


சாதாரண கொரோனா வைரஸின் செறிவைவிட, டெல்டாவின் செறிவு ஆயிரம் மடங்கு அதிகமாக இருப்பதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் வைத்தியர் சந்திம ஜீவந்தர இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சாதாரண கொரோனா வைரஸுடன் அடையாளம் காணப்படுகின்ற தொற்றாளர்களது வைரஸ் செறிவைக் காட்டிலும், டெல்டாவுடன் அடையாளம் காணப்படுகின்றவர்களின் வைரஸ் செறிவு 1,000 மடங்கு அதிகமாக உள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் காரணமாக பரவல் வேகமும், பாதிப்பு வீதமும் மிக அதிகமாக இருக்கும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## மிருதங்கப் பேராசான் சின்னராசா காலமானார்



கலாபூஷணம், கலைஞான கேசரி, லயஞான சுரபி, வயஞான பானு லய ஞான கவாபமணி, கலைச்சுடர் மிருதங்க விரிவுரையாளர், பரீட்சகர், பாடல் ஆக்குநர், பல்லவி படைப்பாளி, மிருதங்கப் பிரமன், மிருதங்க சிட்சாதிபதி ஆகிய பட்டங்களினால் நம் திருநாட்டினை அலங்கரித்த மிருதங்கப் பேராசான் தேதகவை ஞான அமரர் ப.சின்னராசா நூற்றுக்கும் மேற்பட்ட மிருதங்க கலாவித்தகர்களை உருவாக்கி, சுமார் 50வரையிலான சிஷ்யர்களை அரங்கேற்றுவித்து, இலங்கையில் வயஞான சாம்ராஜ்ஜியத்தை பேறாக்கி அதிசயிக்க வைத்த மிருதங்க வயப்பிரம்மனே அமரர் ப. சின்னராசா ஆவார்.

மிருதங்கவாத் தியத்தில் வியத்தகு குருவான ஏ. எஸ். இராமநாத வள்ளலின் பிரதம சீடனாக விளங்கிய இவர் 1,000 மேடைகண்ட, 1,000 பிறை வணங்கிய கலாநிதி பட்டத்திற்குரிய தகுதிமிக்கவராவார். மிகவும் பரிசுத்தமான புண்ணியவானாக இசையுலகம் அவரைப் பதிவு செய்கிறது. அற்புதமான கலைஞன் ஆவார்.

## கறுப்பு ஜூலை பொறுப்புக்கூறலை வலியுறுத்தினார் கனேடிய பிரதமர்




இலங்கையில் கறுப்பு ஜூலை கலவரத்தில் உயிரிழந்தவர்களை நினைவுகூருவதாக கனேடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

தமிழர்களின் வாழ்வில் ஆறாவடுவை ஏற்படுத்திய கறுப்பு ஜூலை இடம்பெற்று 38 வருடங்கள் நிறைவடைந்துள்ளமையை முன்னிட்டு அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கறுப்பு ஜூலை மற்றும் அதன் பின்னர் ஏற்பட்ட மோதலின் போது தமது அன்புக்குரியவர்களை இழந்தவர்களுக்கு கனடா அரசாங்கத்தின் சார்பாக தனது ஆழ்ந்த அனுதாபங்களையும் அவர் தெரிவித்தார்.

2009 ஆம் ஆண்டு ஆயுதமோதல் முடிவடைந்த நிலையில் நாட்டில் அனைவருக்கும் நீடித்த அமைதி மற்றும் நல்லிணக்கத்தை அடைய நாம் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்றும் ஜஸ்டின் ட்ரூடோ அழைப்பு விடுத்தார்.

## கொவிட் தடுப்பூசித் திட்டம் தொடர்பில் கிராம உத்தியோகத்தர்கள் அறிக்கை

ஒவ்வொரு மாவட்டத்திலும் கொவிட் தடுப்பூசித் திட்டத்தின் முன்னேற்றம் குறித்து கிராம உத்தியோகத்தர்களால் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் என சுற்றறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அண்மையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் நடந்த கொவிட் கட்டுப்பாட்டு செயலணி கூட்டத்தில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி, கொவிட் தடுப்பூசி திட்டத்தின் முன்னேற்றம் 4 பிரிவுகளின் கீழ் அறிக்கையிடப்பட வேண்டும்.

வயது அடிப்படையில் தகவல்கள் பெறப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும் என சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, ஒவ்வொரு கிராம உத்தியோகத்தரும் இந்தத் தகவல்களை அடுத்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன் அறிக்கையிட வேண்டும்.

இருப்பினும், இந்தத் திட்டம் நடைமுறைக்கு சாத்தியமற்றது என கிராம உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

## நாடளாவிய ரீதியில 10 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்பு கடமையில்!

நாடளாவிய ரீதியில் 10 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

நேற்று(வெள்ளிக்கிழமை) முதல் ஆரம்பமாகியுள்ள வார இறுதி நீண்ட விடுமுறையை அடுத்தே இவர்கள் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன், மாகாண எல்லைகளிலும் பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

இதன்போது பயணக்கட்டுப்பாடுகளை மீறிப்பயணிப்போருக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

## டெவோன் நீர்வீழ்ச்சியில் விழுந்து காணாமற்போன யுவதியை தேடும்பணி 5 ஆவது நாளாக முன்னெடுப்பு

டெவோன் நீர்வீழ்ச்சியில் தவறி விழுந்து காணாமல் போன யுவதியை தேடும் பணி, 5 ஆவது நாளாக இன்றும் (சனிக்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

தலவாக்கலை - லிந்துலை லென்தோமஸ் தோட்ட பகுதியைச் சேர்ந்த 19 வயதான மணி பவித்ரா என்ற யுவதியே குறித்த சம்பவத்தில் காணாமல் போயுள்ளார்.

அதாவது கடந்த 18.07.2021 பிற்பகல், நீர்வீழ்ச்சியை பார்வையிடச் சென்ற 4 பெண்களில் ஒருவரே, இவ்வாறு நீர் வீழ்ச்சியில் தவறி விழுந்துள்ளார் என திம்புளை - பத்தனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் நீர்வீழ்ச்சியின் உச்சிக்கு கால் கழுவ சென்ற யுவதி ஒருவரே, இவ்வாறு கால் வழுக்கி நீர் வீழ்ச்சியில் விழுந்துள்ளார் எனவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அன்றைய நாள் முதல் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் விமானப் படையினர் ஆகியோர் இணைந்து, காணாமல் போயுள்ள யுவதியை தேடும் நடவடிக்கையை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர்.

அந்தவகையில் நேற்று சுமார் 200 பேர் அடங்கிய இராணுவக் குழு, நீர்வீழ்ச்சியின் மேல் மற்றும் கீழ் பகுதிகளில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தது.

எனினும் காணாமல் போன யுவதியின் எந்தத் தடயமும் இதன்போது கண்டுபிடிக்கப்படாத நிலையில் இன்றைய தினமும் தேடுதல் நடவடிக்கையினை இராணுவக் குழு முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.07.2021இல் வெளியிடப்பெற்றது.